# 3 இஸ்ரயேல் இறைவாக்கினர்கள்

முதலாம் மாணவன் - நான் உமது எதிர்காலம் பற்றிச் சொல்லுவேன். உமது விதிப்படி தான் எல்லாம் நடக்கும். எவராலும் விதியை மாற்றமுடியாது வாரும் உமது எதிர்காலம் பற்றி நான் சொல்லுகிறேன்.

இரண்டாம் மாணவன் - நான் வாழும் கடவுளின் செய்திகளைக் கொண்டு வந்து அவருக்காக பேசுபவன். இறைசித்தத்தை வெளிப் படுத்துவதே எனது குறிக்கோள்.

மூன்றாம் மாணவன் - இந்த இருவருக்கும் இடையே வேறுபாடு உண்டா? வெளித்தோற்றத்தில் வேறுபாடு இல்லை.

நான்காம் மாணவன் - ஏன் இல்லை? முதல் ஆள் (குறி) சொல்லுபவன் இரண்டாம் ஆள் இறைவாக்கினன்.

மூன்றாம் மாணவன் - இருப்பினும் இருவரும் ஒன்றைத் தானே சொல்லுகிறார்கள் எனக்கென்றால் வேறுபாடு தெரியவில்லை.

நான்காம் மாணவன் - ஒரே விடயமாவது எப்படி? ஒருவர் எதிர்காலம் பற்றிச் சொல்கிறார். மற்றவர் இறைவார்த்தையைக் கூறுகிறார். எதிர்காலத்தை பற்றி கூறும் குறி கூறுபவள் ஒருவருடைய விதியை பற்றிக் கூறுகிறாள். கத்தோலிக்கராகிய நாம் குறி பார்க்கவும் அவற்றை நம்பவும் கூடாது. விதி என்று ஒன்று இல்லை. விதி என்று கூறி எமது எதிர்காலத்தைப் பாழாக்குவது பாவம். இறை சித்தத்தின் படியே அனைத்தும் நடக்கும். இறை செய்திக்கு செவிசாய்க்க வேண்டும்.

இஸ்ரயேலில் இறைவாக்கினர் என அழைக்கப்படுவோர் இறைவனுக்காகப் பேசி, அவரது செய்தியை மக்களுக்கு அறிவித்த குழுவினராவர். அவர்கள் அனைவரும் பதவி, அதிகாரம், தராதரம் பட்டம் மற்றும் தமக்கு கிடைக்கும் பிரதிபலன் ஆகியவற்றைக் கருதாது இறைசெய்தியை எடுத்துரைத்தனர். இறைவாக்கினர்கள் 'நபி' என்னும் எபிரேயச் சொல்லால் அழைக்கப்பட்டனர். அதன் பொருள் 'இறைசித்தத்தை மற்றவருக்கு அறிவிப்பவர் என்பதாகும். கிரேக்க மொழியில் 'ப்றோபேரஸ்'

என அழைக்கப்பட்டனர் அதன் பொருள் 'ஒருவருக்காகப் பேசுபவர்' என்பதாகும். அதன்படி யாவே இறைவனுக்காகப் பேசுகின்றவர்களே இறைவாக்கினர் ஆவர். இறைவாக்குரைக்கும் போது மூன்று விதமான சொற்பதங்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

1. ஆண்டவர் திருவாய் மலர்ந்தருளுகின்றார். (எசா 1:2)
2. என்கிறார் ஆண்டவர் (மீக் 4:6)
3. ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது. (எசே 12:1)

இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுவது இறைவாக்கினர்கள் தமது கருத்துக்களை உரைக்கவில்லை. மாறாக இறைவனின் செய்தியை எடுத்துரைத்தனர் என்பது தெளிவாகின்றது.

## இஸ்ரயேல் இறைவாக்கினரை இருவகைப்படுத்தலாம்

1. எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்.
2. எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்.

எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றனர். மேலும் அவர்களின் போதனைகளும் செயல்களும் பழைய ஏற்பாட்டில் சாமுவேல், அரசர்கள் ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.
அவ்வாறான இறைவாக்கினர்கள்.

1. நாத்தான்
2. எலியா
3. எலிசா
4. குல்தா
5. அஹியா
6. மீக்காயா

## எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினர்களின் பண்புகள்

1. தியானத்தில் ஆழ்ந்திருப்பர். (1 சாமு 10:5 - 15)

2. குழுவாகப் பணிசெய்வர் (1 சாமு 19:18 -24)

3. தமது தூதுப் பணியை உறுதிப்படுத்த அடையாளங்களை செய்வர். (1 அரசர் 17:16 - 24)

## எழுத்து வடிவம் பெற்ற இறைவாக்கினர்.

பழைய ஏற்பாட்டில் இவர்களின் பெயரில் நூல்கள் உண்டு. இவர்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

எழுத்து வடிவம்
பெற்ற இறைவாக்கினர்

**பெரிய இறைவாக்கினர்**

1. எசாயா
2. எரேமியா
3. எசேக்கியேல்

**சிறிய இறைவாக்கினர்**

1. ஓசேயா
2. யோவேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீக்கா
7. நாகூம்
8. அபக்கூக்கு
9. செப்பனியா
10. ஆகாய்
11. செக்கரியா
12. மலாக்கி

இறைவாக்கினர் எழுதிய நூல்களிலுள்ள அதிகாரங்களின் அளவைக் கொண்டு பெரிய சிறிய இறைவாக்கினர் என வகைப்படுத்தப்படுகின்றனர்.

## இறைவாக்கினர் எசாயாவின் அழைப்பு (எசா 6:1-13)

இறைவாக்கினர் எசாயா ஆலயத்தில் காட்சி ஒன்று கண்டார். தூய்மையான இறைவனைப் போற்றிப்புகழும் சேராபீன்களின் (வானதூதர்) குரலொலியால் ஆலயத்தின் அடித்தளங்கள் அசைந்தன. இவ்வாறு இறை அனுபவத்தைப் பெற்ற எசாயா இறைவாக்கினர் 'ஐயோ நான் அழிந்தேன்; ஏனெனில் தூய்மையற்ற உதடுகள் கொண்ட மக்கள் நடுவில் வாழ்பவன் நான்; படைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்கள் கண்டனவே' என்றார். அப்பொழுது சேராபீன்களுள் ஒருவர் பலி பீடத்திலிருந்து நெருப்புப் பொறி ஒன்றைக் குறட்டால் எடுத்து அதைத் தம் கையில் வைத்துக் கொண்டு என்னை நோக்கிப் பறந்து வந்தார். அதனால்




3.1 எசாயா இறைவாக்கினர்.

என் வாயைத் தொட்டு 'இதோ இந்நெருப்புப் பொறி உன் உதடுகளைத் தொட்டது. உன் குற்றப்பழி உன்னை விட்டு அகன்றது. உன் பாவம் மன்னிக்கப்பட்டது' என்றார். மேலும் 'யாரை நான் அனுப்புவேன்? நமது பணிக்காக யார் போவார்?' என வினவும் என் தலைவரின் குரலை நான் கேட்டேன். அதற்கு 'இதோ நானிருக்கிறேன் அடியேனை அனுப்பும்' என்று பதிலளித்தார். அதனைத் தொடர்ந்து இறைவாக்கினர் எசாயா தமது இறைவாக்குப் பணியினை ஆரம்பித்தார்.

எசாயா கண்டு அனுபவித்த இறைவன் நாம் வழிபடும் ஆலயங்களிலும் பிரசன்னமாக இருக்கிறார். விசேடமாக அவரது மகன் நமது ஆண்டவர் இயேசு நற்கருணை வடிவில் பிரசன்னமாக இருக்கிறார். எனவே இறைவன் வாழும் இல்லமாகிய தேவாலயத்தில் பக்திப்பற்றுதலுடன் நடந்துகொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

### எரேமியாவின் அழைப்பு (எரே 1:1-19)

ஆண்டவர் எரேமியாவுக்கு இவ்வாறு கூறினார். 'தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்க முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்க முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன். மக்களினங்களுக்கு இறைவாக்கினனாக உன்னை ஏற்படுத்தினேன். நான் 'என் தலைவராகிய ஆண்டவரே எனக்குப் பேசத் தெரியாதே, சிறுபிள்ளை தானே' என்றேன் அதற்கு ஆண்டவர் 'சிறுபிள்ளை நான் என்று சொல்லாதே; யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல்; எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல். 'இதோ பார்! என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும் தகர்க்கவும் அழிக்கவும் கவிழ்க்கவும் கட்டவும் நடவும் நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசர்கள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்' என்றார்.



3.2 எரேமியா இறைவாக்கினார்.

எரேமியா இறைவாக்கினரைப் போல நாமும் பலவீனங்கள் மத்தியில் இறைவன் எமக்குத் தரும் கடமைகள் பொறுப்புக்களை சரியாக நிறைவேற்ற இறைவல்லமையைப் பெறுவோம்.

### எசேக்கியேல் இறைவாக்கினரின் அழைப்பு (எசே 2:1 3:5)

இறைவன் எசேக்கியேல் இறைவாக்கினருக்கு அடையாளம் மூலம் தமது செய்தியை வழங்குகின்றார். 'மானிடா நான் உனக்குத் தருகின்ற இச்சுருளேட்டைத் தின்று உன் வயிற்றை நிரப்பு' என்றார். எசேக்கியேல் இறைவாக்கினர் ஏட்டுச் சுருளை உண்டபோது அவரது வாயில் தேன்போல் இனித்தது. ஆண்டவர் அவரிடம் 'மானிடா எனக்கெதிராகக் கிளர்ச்சி செய்யும் இனத்தவராகிய இஸ்ரயேல் மக்களிடம் நான் உன்னை அனுப்புகிறேன் ....' என்றார்.

ஆழ்ந்த விசுவாசத்திலும் இறைவல்லமையிலும் ஊன்றிய எசேக்கியேல் பபிலோனிய அடிமைத் தனத்திலிருந்த இஸ்ரயேல் மக்களுக்கு சொந்த நாட்டிற்கு செல்வோம் என்னும் நம்பிக்கையை கொடுக்கும் விதமாக இறைவாக்குரைத்தார்.


கிறிஸ்தவராகிய நாம் திருமுழுக்கின் மூலம் இறை வாக்குப் பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம். எனவே நாம் எமது திருமுழுக்கு அழைப்பை விளங்கிக் கொண்டு இறைவார்த்தையை அறிவிப்ப வர்களாக செயற்பட வேண்டும். இறைவார்த்தைக்கு மாறாக செயற்படுவோருக்கு இறைவார்த்தையின்படி வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும்.



3.3 ஏசேக்கியேல் இறைவாக்கினார்.

**செயற்பாடு**

1. தரப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தி எழுத்துவடிவம், பெற்ற, பெறாத இறைவாக்கினர்களை இனங்கண்டு நிரப்புக.




2. இறைவார்த்தையை எடுத்துரைக்க உமக்குக் கிடைத்த ஐந்து சந்தர்ப்பங்களை எழுதுக.

**வாழ்க்கைக்கு**

- ✝ திருமுழுக்கில் பெற்ற இறைவாக்கினர் அழைப்பின் படி வாழ முயல்வோமாக.
- ✝ இறைவார்த்தையின் பணியாளர் ஆவோம்.
- ✝ எப்பொழுதும் உண்மைக்குச் சான்று பகர்வோம்.
- ✝ எமது பலவீனங்களில் இறைவனைக் காண்போம்.